RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகளில் ‘பூ’ என்னும் குறியீடு

இர. பிரபா [அ, *]

[அ] தமிழ்த்துறை, இலயோலா கல்லூரி (தன்னாட்சி), சென்னை-34, தமிழ்நாடு, இந்தியா

# Symbolism of ‘Flower’ in Rajam Krishnan Short Stories

**R. Prabha** [a, *]

[a] Department of Tamil, Loyola College, Chennai – 34, Tamil Nadu, India

* Corresponding Author: drrprabha2023@gmail.com

Received: 25-12-2025
Revised: 28-02-2026
Accepted: 11-03-2026
Published: 15-03-2026

Check for updates

**ABSTRACT**

With regard to the Tamil short story genre of literature concerning feminism, Rajam Krishnan (1925 – 2016) stands as a unique personality. The picture of a woman is not depicted to stay within the familial circle of Father, Husband and the Society. Rather, women are portrayed to possess the capacity to live for themselves in an independent manner. Instead of keeping the wishes and needs dormant, the women are showcased to possess self-confidence and determination by breaking the traditional shackles through the author's stories. Among her works, the short story “Poo” is symbolic in nature which has to be understood in length and breadth. The author’s works titled with flower names like “Alli”, “Nithiyamalli”, “Sivappu Roja”, “Senthamarai”, “Pudhupoo” reinforces the importance of the blossoming of women’s ideals through their characterisation.

**Keywords:** Rajam Krishnan, Embodiment of beauty, Principle, Decorative Symbols, Structural Modification.

## முன்னுரை

உலக ஜீவராசிகள் அனைத்தும் இவ்வுலகில் சுதந்திரமாகவே படைக்கப்பட்டுள்ளன. அதன் இயல்புக்கேற்ப அழகாய் வாழ்ந்திட விதிக்கப்பட்ட நியதிகளில் ஒரு நியமம் உண்டு. ஆனால், சுயநலமான வாழ்வியல் பூக்கள் இறுக்கமாக்கப்பட்ட மனங்களுக்கு இடையில் அன்பு, பற்றுதல் இது அவர்களுக்கானது தான். அழகான ரோஜா பூக்கள் முற்களின் நடுவே அவை பாதுகாப்பாய் இருக்கின்றன என்று ரசித்துப் பார்க்கின்ற மனநிலையைப் பெற்றவர்களே இங்கு ஏராளம். இப்படிப்பட்ட மனநிலையைப் பெற்ற மனங்களில் பெண்களுக்கான இடம் எது? அவர்களுக்கான சுதந்திரமா இது, காலம் காலமாய் எங்கோ யாரோ ஒருவர் வீட்டில் உடைக்கப்பட்டு சிறகொடிந்து வாழ்ந்து, மடிகின்ற கதைகளைக் குறித்து நாம் சிந்தித்தது உண்டா? ஆனால், எங்கோ சிறகுடைந்து தரை விழுந்து துடிக்கின்ற பறவையின் கதறலை உள்ளத்தால் உணர்ந்து அதன் உணர்வை யாரோ ஒருவர் எழுதி விடுவது எங்ஙனம். அது போலவே பெண்களின் கதறல்களை, தேடுதல்களைக் குறித்து ஒட்டுமொத்த பெண் சமூகத்தின் ஒற்றைக் குரலாக இராஜம் கிருஷ்ணன் எழுதியிருக்கிறார். பெண்களைக் குறித்து உளவியல் ஒடுக்கும் முறை, சமூக எதார்த்தம், பெண்களின் தேவைகள், நுண்ணிய உணர்வுகள் போன்ற உணர்வுகளை மென்மையான மொழி நடையில் குறியீடுகளைக் கொண்டு அதன் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார். இது இராஜன் கிருஷ்ணன் படைப்புகளுக்குக் கூடுதல் தனித்துவம் ஆகிறது. இவரது கதைகளில் காணப்படும் குறியீடுகளில் பூ முக்கிய இடம் பெறுகிறது. பூவினைக் குறியீடாக வைத்து எழுதிய ‘அல்லி, நித்தியமல்லி, சிவப்பு ரோஜா, செந்தாமரை, புதுப்பூ’ போன்ற கதைகளில் வெளிப்படுகிற செய்திகளை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## குறியீடு -இலக்கியப் பொருள்

குறி என்பது ஒன்றை அல்லது ஒரு நிகழ்வை இனம் காட்டுவது. குறிப்பு என்பது ஒன்றைச் சுருக்கமாக அல்லது மறைமுகமாக உணர்த்துவது. இவ்வாறு குறியினை அமைத்து வெளியிடுவது குறியீடுதல். குறி, குறிப்பு என்பனவற்றின் வளர்ச்சி நிலையே குறியீடு ஆகிறது. குறி அல்லது சின்னம் என்னும் பொருளுடைய 'சிம்பாளிக்' என்னும் ஆங்கிலச் செல்லுக்கு, சின்னம், அடையாளம், குறியீடு, பொதுக்குறியீடு, நினைவுக் குறிப்பு சின்னம், பொதுநிலை குழுஉக்குறி, தனித்துறைக் குழுஉக்குறி என்று அகராதி பொருள் சுட்டுகிறது (முனைவர் இர.பிரபா தத்துவத்தின் முகமும் எதார்த்தத்தின் முகவரி -பக்கம் .173). ' பூ' என்ற அடையாளம் அதன் அழகு, மென்மை, மணம், நிலையின்மை ஆகிய காரணங்களால் இலக்கியத்தில் பல்வேறு விதமான பொருள்களில் கையாளப்படுகின்றன.

## 'பூ' - அழகின் குறியீடு

இராஜம் கிருஷ்ணன் சிறுகதைகளில் பூ முதன்மையான அழகின் குறியீடாகக் காண்பிக்கப்படுகிறது. பெண்களின் உடல் அழகு மட்டுமல்லாது. அவர்களது உள்ளார்ந்த மென்மையின் அழகு, அன்பு, கனிவு ஆகிய பண்புகளையும் பூ தான் குறியீடாகப் பிரதிபலிக்கிறது. அதுமட்டுமின்றி சமூகத்தின் கடுமையான பார்வைக்குள் சிக்கியப் பெண்களின் இயல்பான நிலையை நினைவூட்டும் விதத்தில் குறியீடு பயன்படுத்தப்படுகிறது.

## இராஜம் கிருஷ்ணன் கதைகளில் பூ குறித்தப் பாத்திரங்கள்

அல்லி, நித்திய மல்லி, சிவப்பு ரோஜா, செந்தாமரை, புதுப்பூ என ஐந்து விதமான தலைப்புகளில் வருகின்ற பெண் கதை மாந்தர்களைப் பற்றிய சித்தரிப்புகள் ஒன்று போலவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர்.

அல்லி கதையில் வருகின்ற கதாபாத்திரமாகிய 'அல்லி' பாத்திரம் ஒட்டுமொத்த பெண்களின் அடையாளமாகச் சித்தரிக்கப்படுகிறாள். இந்தக் கதையில் படைக்கப்பட்டிருக்கும் அல்லி பாத்திரம் இளமையிலிருந்து பெற்றோரை இழந்து, தன் வருமானத்திலேயே வாழ்ந்து வருகின்ற ஒரு பெண். சமூகத்தில் அத்தனை விதமான பிரச்சனைகளையும் எதிர்கொண்டு, தன் காலிலேயே நின்று, பிழைத்து, அந்த வருமானத்தை ஏற்று, அதிலேயே அவள் மகிழ்வாக வாழ்கின்ற சூழலைக் குறித்து, இக்கதை மிக நுணுக்கமாய் விவரிக்கின்றது. ஒரு பெண் யாருமற்ற சூழலிலும் தைரியம் கொண்ட பெண்ணாக இருந்தால் இந்தச் சமூகத்தில் எந்த விதமான சூழலையும் எதிர்கொள்ள இயலும் என்கிற கருத்தை முன்வைத்து அல்லி கதாபாத்திரத்தினை ஆசிரியர் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

> "எப்படியோ உடம்பு உழைச்சுப் பாடுபட்டு, நாலு காசு சம்பாதிக்கிற பெண்பிள்ளை கட்டிக்கிட்டவன் முன்னே தன் காசையும், தன்னையும் பெரிசா நினைக்கிறதில்லே. என்னங்க, அவரு நல்ல வேலை இல்லாம பட்டணத்திலே காசுக்காக கஷ்டப்பட்ட போது என் மனசு பட்ட பாடு எனக்குத் தான் தெரியும். அதெல்லாம் சொல்லிக்க முடியாது. உங்களுக்குப் பொய் போலே இருக்கும்" (இராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகள்-ப.8)

பெண்களின் அடையாளமாகவே காதல் விளங்குகின்றது. ஒரு பெண் காதலில் முழுமை அடைகிறாள். அந்தக் காதலுக்காக அவள் இறுதிவரைப் போராடுகின்றாள். காதலித்தவனைக் கணவனாகக் கைப்பிடித்து விட்டால், எந்தச் சூழ்நிலையிலும் அவனைக் கைவிடாமல், அவன் ஒருவனையே நினைத்துக் கொண்டு வாழுகின்ற மனநிலை கொண்ட பெண்கள் உளவியலைக் குறித்து இக்கதை பேசுகின்றது. குடும்ப பாரத்தினை ஏற்று சுமந்திடும் ஆண்களுக்குச் சில சூழல்களில் வேலை பறிபோக, அச்சுழலைப் பெண்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர். ஆண்களுக்கு நிகராக அவ்விடத்தில் ஒரு குடும்பப் பொறுப்பினை முழுவதுமாகச் சுமந்திடும் நிலையில் அவர்களுக்கு உண்டான மனத்தின்மையை இக்கதையில் விவரிக்கின்றார். பெண்களின் வாழ்க்கை ஒரு பூவோடு ஒப்பிட்டு காண்பிக்கப்படுகிறது. ஒரு பூவின் நிலைப்பாடு ஓரிடத்தில் பூத்து, மற்றோரிடத்தில் மலர்ந்து, எவ்விடத்திலும் அதன் தன்மை மாறாது, இறுதியில் பின்வாடி உதிர்ந்து விடுகிறது. அதைப் போலவே, சில பெண்களின் இளமை வாழ்வும், அவர்களின் கனவுகளும், ஆசைகளும், சமூகச் சூழலால் ஏதோவிதத்தில் முடிந்து போகின்ற சூழலைக் குறித்து பூவின் குறியீட்டின் வழி இக்கதை விளக்கிச் செல்கிறது.

'நித்திய மல்லி' என்ற மற்றொரு கதையில் வருகின்ற 'தங்கம்' என்னும் பாத்திரம் சமூகத்தில் பல்வேறு நிலைகளில் குழந்தையின்மையால் ஒடுக்கப்படுகின்ற அப்பாவி பெண்களின் குறியீடாகக் காட்சிப்படுத்தப்படுகிறாள். இந்தக் கதையில் வருகின்ற தங்கம் அழகிற்கும்,

அன்பிற்கும் உகந்தவளாகச் சித்தரிக்கப்படுகிறாள். ஒரு குடும்பத்தினை மகிழ்வுற்றதாக அதன் இயல்பிற்கேற்ப வாழ்ந்து மகிழ்விக்கும் பெண்ணாகவும் விளங்குகிறாள். ஆயினும் ஒரு குடும்பத்தில் எதிர்பார்க்கின்ற குழந்தைப்பேற்றைத் தர இயலாத போது, அங்கே அவளை அந்தக் குடும்பமே விலக்கி வைக்கும் சூழல் ஏன் ஏற்படுகின்றது என்பதனைச் சுட்டி இக்கதை சமூகத்திடம் ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டுவதாக அமைகின்றது. சான்றாக,

"இந்தச் சித்திரைக்கு வருஷம் பன்னிரண்டு ஓடிப்போச்சு. பிறப்பதாக இருந்தால் பிறக்காதாடியம்மா? நாமும்தான் எத்தனையோ செய்து பார்த்தாச்சு. இராம ஜோசியர் அடிச்சுச் சொல்லிவிட்டார். அவ ஜாதகப்படிக்கு வம்ச விருத்திக்கு பிராப்தமே கிடையாதாம். இப்படி நேர்ந்தால் உலகத்திலே வேறு கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லையா? என்ன அதிசயம்?" (இராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகள்- பக்கம். 201)

குடும்ப உறுப்பினர்களால் தங்கத்தின் கணவருக்கு வேறொரு திருமணம் செய்ய ஏற்பாடு நடக்கிறது. அந்தச் சூழலில் ஒரு பெண்ணின் மனநிலையைத் தங்கம் கதாபாத்திரத்தின் வழி விளக்கிச் செல்கின்றார். இந்தக் கதையில் மற்றொரு கூடுதலான சிறப்பு என்னவென்றால் கதையின் துவக்கத்திலிருந்து இறுதிவரை 'நித்தியமல்லி' செடி மனித உணர்வுகளைப் பெற்று தானே பேசுவது போல கதை அமைக்கப்பட்டுள்ளது.

தங்கம் பாத்திரத்தின் குறியீடு 'நித்திய மல்லி'. இந்த மல்லிகை பூத்துக் குலுங்கி கொண்டிருக்கும் பொழுது அனைவராலும் விரும்பப்படுகின்ற இடத்தில் வைத்து கொண்டாடப்படுகின்றது. அதுவே பூக்களற்று காய்ந்து இருக்கின்ற சூழலில் யாருடைய கவனமும் பெறாமல் போகிறது. இந்தச் சூழலில் நித்திய மல்லி செடி எப்படி இருக்கின்றதோ அதைப்போலவே தான் பெண்களின் வாழ்க்கையும் குறியீட்டின் வழி இக்கதையில் காட்சிப்படுத்தப்படுகின்றது. ஆயினும் உறுதிகொண்ட பெண்கள் தங்களைத் தாங்களே தேற்றிக்கொண்டு, வாழ்க்கையின் அடுத்த கட்டத்தினை நகர்த்திடச் செல்லும் மனத்தின்மையை இக்கதை சுட்டுகின்றது. சான்றாக,

"கஷ்டமோ சுகமோ தினமும் இது அரும்புகட்டி மலரத் தவருகிறதா? அப்படி நாமும் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் இல்லையா?" (இராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகள்- பக்கம்.198)

என்று தங்கம் தன்னுடைய கணவனைப் பார்த்து கேட்பதாக ஒரு காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடம் குறியீட்டின் வழி ஒட்டுமொத்த சமூகத்திடமும் ஆசிரியர் ஒரு கேள்வியினை முன்வைப்பதாக அமைகிறது. மேலும், இக்கதையில் மனித வாழ்வின் தேவைகளைக் குறித்து மிக மென்மையான பூ என்னும் குறியீட்டின் வழி காத்திரமான மனநிலையை ஆசிரியர் பதிவு செய்கிறார். எல்லாவித ஆசைகளையும் பெண்கள் சுமந்து கொண்டு குடும்பத்திற்காகவே வாழ்ந்து, இறுதியில் இறந்து போகின்ற சூழலில் பாதிக்கப்படும் பெண்ணினத்தின் குமுறலாக இராஜம் கிருஷ்ணன் விளங்குகிறார்.

'சிவப்பு ரோஜா' என்ற மற்றொரு கதையில்

"ஆசை வெட்கம் அறியாதுதானே?, அதுவும் மங்கை மலருக்கு ஆசைப்படுவது இயல்பு அல்லவா?" (இராஜம்கிருஷ்ணன் சிறுகதைகள் -பக்கம் .422)

இந்தக்கதை இப்படியாகத் தொடங்குகிறது. பெண்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் இடத்திற்குத் தகுந்தாற்போல் தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டால் ஒரு ஆணைவிட வீரத்திலும் துணிவிலும் உறுதியான மனநிலையில் வாழ்ந்திட இயலும் என்ற மனத்துணிவை இக்கதையின் வழி விளக்குகின்றார். எடுத்துக்காட்டாக

"சமயோசித புத்தியால் தன் உயிரையும் பொருட்படுத்தாமல், பிற உயிருக்கு உதவி செய்த அந்த உருவத்தை நன்கு காணும் பொருட்டுப் பையிலிருந்த "டார்ச்" விளக்கை எடுத்துப் போட்டார் துரை. …யார் இது திம்மையா? உன்… நீ கலியாணம் செய்யப்போகும் பெண்ணா? என்ன தைரியம்? எவ்வளவு துணிச்சல்? என்று நன்றி மேலிடப் புகழ்ந்து கொண்டே பங்களாவுக்குள் அவளைப் பின்தொடர்ந்து வந்தார்." (இராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகள் - பக்கம். 427)

இராஜம் கிருஷ்ணன் சிறுகதைகளில் பலவற்றுள் பெண்கள் அமைதியான சுபாவத்தினைப் பெற்றவர்களாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர். இக்கதையில் வரும் இரண்டு விதமான பெண்கள் ஒன்று கன்னி, மற்றொருவர் எஜமானி துரைசாமி அம்மா இவ்விரு பெண்களும் பூ என்னும் குறியீட்டின் வழி அமைதியான குணாதிசயத்தினைப் பெற்றவர்களாகவே சித்தரிக்கப்படுகின்றனர். இறுதியில் துணிச்சலும் அஞ்சா நெஞ்சம் உடைய பெண்களாக வலம் வருகின்றனர்.

"செந்தாமரை" என்னும் கதையில் வருகின்ற கதாபாத்திரமாகிய செந்தாமரை குடும்பப் பாரத்தைக் கணவனோடு சேர்ந்து சுமக்கின்ற பாத்திரமாகக் காட்சிப்படுத்தப்படுகின்றாள்.

பிள்ளைகளை வளர்ப்பதில் ஆணுக்கு ஆணாகவும், பெண்ணுக்குப் பெண்ணாகவும் இருந்து குடும்பத்தைப் பராமரித்து வருகிறாள்.

“வீட்டைச் சுற்றிக் கத்தரிக்காய் பயிர் செய்தாள். பள்ளிக்கூடம் வாசலிலே கடலை வியாபாரம் ஆரம்பித்தாள். பள்ளிக்கூடம் இல்லாத நாளிலே சினிமாக் கொட்டகை முன்பு கடை போட்டாள். அவள் உழைப்பு ஆறுமுகத்தின் வாயிலே புகையாகப் போயிற்று” (இராஜம் கிருஷ்ணன் சிறுகதைகள் - பக்கம். 432)

எனும் இக்கதையில் வருகின்ற மூதாட்டி செந்தாமரை கதாபாத்திரம் தம் வாழ்க்கையில் அனைத்தையும் இழந்த பொழுதும், தைரியத்தை விட்டு விடாமல் அதை மட்டுமே நம்பிக்கையாகக் கொண்டு வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்தி செல்கின்ற முதியவர்களின் சூழ்நிலையைக் குறித்து இக்கதாபாத்திரம் பேசுகின்றது.

‘புதுப்பூ’ என்ற கதையில் பணக்கார முதலாளி பையனை அவன் வீட்டில் வேலை பார்க்கும் வேலைக்காரி ஒருதலையாகக் காதலிக்கிறாள். அப்பையன் தான் நேசிக்கும் பெண்ணை மனதில் கொண்டு இவளோடுப் பேசிப்பழகுகிறான். அப்பெண் தன் மனத்தினுள் தன்னை விரும்புகிறான் என்ற கற்பனையில் மூழ்குகிறாள். ஆசையை வளர்த்துக் கொள்கிறாள். நிறைவாக பணக்கார வீட்டுப்பையனுக்கு அவன் காதலித்த பெண்ணோடு திருமணம் செய்துவைக்கும் நிகழ்விற்கு வேலைக்காரப்பெண்ணையும் தாயையும் அழைக்கிறார்கள். அந்தச்சூழலில்தான் அவன் தன்னை விரும்பவில்லை என்று தெரிகிறபொழுது மனம் உடைகிறாள். அதுமட்டுமில்லாமல் சமூகத்திடம் அப்பெண்ணின் கேள்விகளாக இக்கதையில் முன்வைக்கிறாள். காலங்காலமாக பெண்கள் தன்மனத்தில் உள்ள விருப்பங்களை வெளிப்படுத்துவதற்கு தடையாக உள்ளது. இந்நிலை மாறிடாதா என்ற ஏக்கத்தின் குரலாக இக்கதை புனையப்பட்டுள்ளது.

## முடிவுரை

பெண்கள் என்றாலே அன்பிற்கும் பண்பிற்கும் அமைதிக்கும் சான்றாக விளங்கக் கூடியவர்கள். அவர்கள் கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ளும் சமயங்களில் பூ என்ற மென்மையின் அடையாளத்தை உடைத்தெறிந்து, பாறை போன்ற உறுதி கொண்ட மனவலிமையே பெண்களுக்கு வேண்டுமென்கிறார். காலங்காலமாகப் பெண்கள் சமுதாயத்தில் வைத்து பார்க்கப்பட்டு வந்த நிலையைக் கடந்து, வாழ்வியல் சூழலுக்கேற்ப மனவலிமையிலும் உடல்வலிமையிலும் தங்களைத் தாங்களே வளர்த்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்று இராஜம் கிருஷ்ணன் பெண்களின் உரிமைக்குரலாகப் பதிவு செய்கின்றார்.

## References


இராஜம் கிருஷ்ணன், இந்திய வரலாற்றில் பெண்மை, தாகம் பதிப்பகம், சென்னை.

இராஜம் கிருஷ்ணன், இராஜம் கிருஷ்ணன் சிறுகதைகள், சீதை பதிப்பகம், முதற் பதிப்பு - 2016.

இராஜம் கிருஷ்ணன், காலந்தோறும் பெண், தாகம் பதிப்பகம், 2022 சென்னை.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License